உ

துர்க்காதேவி துணை



தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## நிர்வாகசபை ஆண்டறிக்கையும் வரவு செலவுக் கணக்கு விபரமும்

**01-01-1998 — 31-12-1998**

★
★★

தெல்லிப்பழை

**1999**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

## தர்மகர்த்தா சபை

துர்க்காதுரந்தரி, கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
(தலைவர்) J. P.
திருமதி ம. இராமநாதர்
(பொதுச் செயலாளர்)
திரு. பா. பசுலகாங்கேயன், U.S.A.
திரு. க. ஜனநாயகம், U. K
திரு. நா. திருநாவுக்கரசு
திரு. அ. சிவபாதசுந்தரம்
Dr. ந. புவனேந்திரன், U. K.
திரு. நா. தவநாதன்
(நிர்வாகச் செயலாளர்)
திரு. அ சண்முகநாதன்
(நிர்வாகப் பொருளாளர்)

## நிர்வாக சபை

துர்க்காதுரந்தரி, கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
(தலைவர்) J. P.
திரு. ந. செல்வநாயகம்
(உப-தலைவர்)
திரு மு. சபாநாதன், J. P. U. M.
நீதிபதி
(உப-தலைவர்)
திருமதி ம. இராமநாதர்
(பொதுச் செயலாளர்)
திரு. நா. தவநாதன்
(நிர்வாகச் செயலாளர்)
திரு. அ. சண்முகநாதன்
(பொருளாளர்)
திரு. சு. ஏழூர்நாயகம்
(உப-பொருளாளர்)
திரு. மு. அருளையா
திரு. ச. ஆறுமுகநாதன்
திரு. ச. விநாயகரத்தினம்
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. சி. குமாரசாமி
திரு. நா. தவமணிநாயகம்
திரு. ச. கந்தையா
திரு. சு. முருகையா
திரு. ஆறு. திருமுருகன், B. A.
திரு. சி. புஷ்பநாதன்
(கொழும்பு)
திரு. நா. சிவநாதன்
(தெ. இ. இ. சங்கப் பிரதிநிதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

# ஆண்டறிக்கை — 1998

## 01 - 01 - 1998 — 31 - 12 - 1998 வரையும்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையின் 01 - 01 - 1998 தொடக்கம் 31 - 12 1998 வரையான தேவஸ்தான வரவுசெலவுக் கணக்கையும் எங்பார்வை அறிக்கையையும் வழமைபோல் துர்க்காதேவி அடியார்களுக்குச் சமர்ப்பிப்பதில் எங்கள் நிர்வாகசபை மிகவும் மகிழ்ச்சி அடைகிறது. கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக வருடாந்த வரவுசெலவு அறிக்கையை இவ்வாறு சமர்ப்பித்து வருகிறோம். நிர்வாகசபைக் கூட்டம் பன்னிரண்டு தடவை இவ்வாண்டு நடைபெற்றன. மேலும் நான்கு சிறப்புக் கூட்டம் நடைபெற்றன.

தேவஸ்த்தான நித்திய பூசைகளையும், நைமித்திய விழாக்களையும் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக தொடர்ந்து நடாத்தி அருட்பணியாற்றி வரும் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவராவர். இவ்வாண்டு மகோற்சவ கிரியைகளை நடாத்தியவரும் கடந்த இருபத்து மூன்று ஆண்டுகள் உதவிக் குருக்களாக இருந்து பணியாற்றி வருபவருமாகிய சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களும், இவர்களுக்கு உதவியாகப் பணிபுரியும் பிரம்மஸ்ரீ சி. சிவரூபசர்மா அவர்களும், சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயா அவர்களும் சிறந்த கடமையாற்றி தேவஸ்த்தானப் பணியில் முக்கிய பங்கு ஏற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விசேட தினங்களில் வருகை தந்து பணிபுரியும் சிவஸ்ரீ ரஜிதகிரிதரக் குருக்கள் (மயிலணி) பிரம்மஸ்ரீ ந. இராமச்சந்திரக் குருக்கள் (வட்டுக்கோட்டை) பிரம்மஸ்ரீ கி. கணேசமூர்த்தி சர்மா (தெல்லிப்பழை) ஆகிய அந்தணப் பெருமக்களுக்கு அம்பாள் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

தேவஸ்தான அலுவலகத்தில் முழுநேர உத்தியோகத்தராகக் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து வரும் கா. சிவபாலன் அவர்களின் தன்னலங் கருதாப் பணி மிகவும் பாராட்டுதலுக்குரியது. சிறந்த பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. கா. சிவபாலன் அவர்கள் ஆலயப் பணிக்கு கிடைத்த அரிய பொக்கிஷமாவார். பணமாகவோ, பவுணாகவோ, வேறு எந்தப் பொருளாகவோ ஆலயத்துக்குக் கிடைப்பதை உண்மையுடனும், நேர்மையுடனும் பேணிக்காத்து வருபவர் இவர் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சிறந்த தமிழறிவும், சைவ அனுஷ்டானமும், கற்றோரைத் தகுதி அறிந்து மதிக்கும் திறனும், சைவசமய நுண் அறிவும் இவரிடம் காணப்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. '' இத்தகைய ஒருவர் ஆலயப் பணிகளுக்கு கிடைத்தற்கு அரியவர்'' என்று பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களும், மாவை ஆதீனகர்த்தர் மகாராஜஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் ஐயா அவர்களும் எடுத்துக் கூறியதை நாம் நினைவில் இருத்துகிறோம். திரு. சிவபாலன் அவர்களின் சேவை இன்னும் பல்லாண்டுகாலம் துர்க்காதேவி தேவஸ்தானத்துக்குக் கிடைக்க வேண்டும் என்று அம்பாளைப் பிரார்த்திக்கிறோம்.

அலுவலகப் பணியாற்றி இந்த ஆண்டு தனது எதிர்கால உத்தியோக வளர்ச்சியின் பொருட்டு யாழ்ரெலிகொம் நிறுவனத்துக்கு கடமை புரியச் சென்ற திரு. ந. உமாகரன் அவர்களும் எமது பாராட்டுக்குரியவர். இடம்பெயர்ந்த காலத்தில் எமது தேவஸ்தானத்துக்கும் மகளிர் இல்லத்துக்கும் இவர் ஆற்றிய அதி உயர் சேவை மிகமிகப் போற்றுதலுக்குரியது. மற்றும் திரு. வி. சிவகுமாரன் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக நற்பணி ஆற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. திரு. சி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தனது சுகயீனம் காரணமாக ஆலயப் பணியிலிருந்து ஒதுங்கி வாழ்கின்றார். என்றாலும் அவருக்குரிய மாதாந்த வேதனம் ஒழுங்காக வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தில் சிற்றூழியர்களாகவும், சமயோசித தொண்டர்களாகவும், அலுவலகப் பணியாளர்களாகவும், அன்னதான உதவியாளர்களாகவும் பதினொருபேர் நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் பெறுகின்ற வேதனத்திலும் பார்க்க ஆலயத்துக்கு இவர்கள் ஆற்றுகின்ற சேவை மிகவும் பாராட்டுதலுக்குரியது.

**உள்நாட்டு, வெளிநாட்டு**
**அன்பர்களின் ஆதரவு :**

ஆலயப் பணிகளுக்கு வேண்டிய அன்பளிப்புகளை எவ்வித குறையும் இன்றி கடிதம் மூலம் அனுப்பியும், வங்கிகளில் அன்பளிப்பை செலுத்தியும், தேவஸ்தானத்துக்கு நேரில் வருகை தந்தும் உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் தாராளமாக உதவுகின்றனர். இதனால் ஆலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரியும் அந்தணப் பெருமக்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உதவக் கூடியதாக இருப்பதுடன் பல்வேறு சமுகப் பணிகளுக்கும், ஆலயப் புனருத்தாரண வேலைகளுக்கும் தாராளமாகச் செலவளிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

1. இலண்டன் தமிழர் ஆதார நிறுவனம்
2. இலண்டன் "ஸ்கொட்" நிறுவனம் (SCOT)
3. U. S. A. தமிழர் ஆதார நிறுவனம்
4. அமரர் திரு. க. கிருஷ்ணபிள்ளை அதிபர் நினைவாகவும் திருமதி கிருஷ்ணபிள்ளை நினைவாகவும் அவர்களின் மகள் திரு. நிர்மலா அவர்களால் வழங்கப்பட்ட நிதி
5. திருமதி விசாலாம்பாள் அரியகுட்டி அவர்களால் நல்லூர்க் கந்தன் மகோற்சவகாலத் தண்ணீர்ப்பந்தல் நிதி.
6. தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. மு. ஜெகதீசன் நினைவாக அமைந்த நிதி
7. மாவிட்டபுரம் வீணியவரையைச் சேர்ந்த திரு. பொ. பாலசுந்தரம் அவர்கள் வழங்கிய அன்பளிப்பு நிதி
8. கந்தரோடை மடத்தடியைச் சேர்ந்த திருமதி புஷ்பலதா இரவீந்திரராஜா அன்பளிப்புச் செய்த பவுண்முடி
9. காங்கேசன்துறையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு. க. ஜெயபாலசிங்கம் அன்பளிப்புச் செய்த 305 அடி நீளமான தேர் வடக்கயிறு.

ஆகிய அன்பளிப்புக்கள் இவ்வருடத்தில் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவற்றின் விபரங்களை கணக்கு அறிக்கையில் தெரிந்து கொள்ளலாம்.

**நிதி நிர்வாகம் :**

தேவஸ்தான நிதிபராமரிப்புச் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கியும் உட்துறைக் கணக்காய்வாளராக கௌரவ சேவை ஆற்றி வரும் திரு. எ. சின்னத்தம்பி அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தேவஸ்தான வருடாந்த கணக்காய்வு அறிக்கையை சிறப்பாக அமைத்து உதவும் வெளித்துறை பட்டயக் கணக்காய்வாளர் செல்வேந்திரா அன்கோ நிறுவனத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகுக. இத்துடன் 1998ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுக் கணக்கறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் பலர் ஆலய நிர்வாகச் செலவுகளுக்கும் அன்னதானம், மகோற்சவம், நேர்த்தி, திருப்பணி ஆகியவற்றுக்கும் பொன்னாகவும், பொருளாகவும், பணமாகவும் வழங்கிய அன்பளிப்புக்கள் அனைத்தையும் அன்புடனும், நன்றியுடனும் ஏற்றுக் கொண்டு நிதி நிர்வாகம் சீராகவும் திருப்தியாகவும் அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

**தேவஸ்தானத்தால் வெளியே வழங்கப்பட்ட பொது அன்பளிப்புகள் :**

1. தெல்லிப்பழை ஸ்ரீ காசிவிநாயகர் ஆலய குடமுழுக்கு விழா
2. யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மன்றம்
3. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி நடராஜர் ஆலயம்
4. வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
5. தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை
6. வலி - வடக்கு பிரதேச சபை
7. யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலை
8. கைதடி அரசினர் முதியோர் இல்லம்
9. சிகிச்சையின் பொருட்டு இந்தியா சென்ற சிறுநீரக சத்திர சிகிச்சை நோயாளர்கள்
10. புற்றுநோய் காரணமாக கொழும்பு செல்லும் நோயாளர்
11. யாழ்ப்பாணம் சுண்டிக்குளி ஊனமுற்றோர் நிறுவனம்
12. பின்தங்கிய பாடசாலைகள் சமூக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான உதவிகள்
13. வன்னி மாவட்டத்தில் இடர்ப்படும் தமிழ் அகதிகள்
14. வன்னி மாவட்டத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் வசதி குறைந்த ஐந்து மாணவர்கள்.

## தேவஸ்தான சிறப்பு விழாக்கள் :

1. **மாசிமக இலட்சார்ச்சனை விழா :**

   01 - 03 - 1998இல் ஆரம்பமாகி 10 - 03 - 1998இல் நிறைவு பெற்றது.

2. **மகா சிவராத்திரி :**

   25 – 02 - 1998இல் பெண்கள் தொண்டர் சபையின் உபயமாக நடைபெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **அறநெறி விழா :**

10 - 05 - 1998 ஞாயிற்றுக்கிழமை இந்துசமய கலாச்சார அமைச்சு திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் யாழ். அரச அதிபரின் அனுசரணையோடு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

5. **வருடாந்த பங்குனிப் பொங்கல் விழா :**
**( பங்குனிக் கடைசிச் செவ்வாய் )**

07 - 04 - 1998 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது

5. **வருடப் பிறப்பு :**

14 - 04 - 1998 செவ்வாய் புதுவருடப் பிறப்பன்று காலை துர்க்கா புஸ்கரணி தீர்த்தத் தடாகத்தில் சங்கிராந்தி தீர்த்தம் நடைபெற்றது. அதனையடுத்து சங்காபிஷேகம், பூசை, திருவிழா நடைபெற்றன.

6. **திருவாசகப் பெருவிழா :**

28 - 06 - 1998 ஞாயிறு திருவாசகம் முற்றோதல், அன்னதானம் என்பன சிறப்பாக நடைபெற்றன

7. **வரலட்சுமி நோன்பு :**

07 - 08 - 1998 வெள்ளி ஐந்நூறு அடியார்களவில் வரலட்சுமி காப்புப் பெற்று விரதமனுட்டித்தனர்

8. **துர்க்காதேவி மஹோற்சவம் :**

24 - 08 - 1998 தொடக்கம் 05 - 9 - 1998 வரை சிறப்பாக நடைபெற்று ஆவணித் திருவோணத்தில் தீர்த்தத் திருவிழாவோடு நிறைவு பெற்றது

9. **நவராத்திரி விழா :**

21 - 09 - 1998இல் திங்கள் ஆரம்பமாகி 30 - 09 - 1998 வரை சிறப்பாக நடைபெற்றது.

10. **கேதாரகௌரி நோன்பு :**

30 - 09 - 1998 தொடக்கம் 20 - 10 - 1998 வரை நடைபெற்று நோன்புப் பூர்த்தியும் நூல் வழங்கும் வைபவமும் இடம்பெற்றன.

11. **திருவிளக்குப் பூஜை :**

03 - 12 - 1998இல் நடைபெற்றது

12. **திருவெம்பாவை விழா :**

24 - 12 - 1998 ஆரம்பமாகி 02 - 12 - 1998 வரை நடைபெற்றது. திருவாதவூரடிகள் புராண படனம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ இராமகிருஷ்ண சுவாமிகளின் வருகை :**

தமிழ்நாடு, கொழும்பு, மட்டக்களப்பு, பருத்தித்துறை ஆகிய இடங்களிலிருந்து அந்தந்த நிறுவனங்களுக்குப் பொறுப் பான வணக்கத்துக்குரிய சுவாமிகள் நான்கு பேர் 08 – 09 – 1998 செவ்வாய்க்கிழமை இவ்வாலயத்துக்கு விஜயம் செய்து பக்தர் களுக்கு தரிசனம் கொடுத்தனர். தேவஸ்தான அந்தணர்கள், நிர்வாக சபையினர், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து இவர் களுக்கு சிறந்த வரவேற்பை அளித்தனர்.

**தர்மகர்த்தா சபை :**

மேற்படி சபையின் ஆரம்பகால உறுப்பினராக விளங்கிய திரு. கு. பாலசிங்கம் அவர்கள் தமது முதுமை காரணமாக தனது மகன் திரு. பா. பாலகாங்கேயன் அவர்களை மேற்படி சபையின் உறுப்பினராக நியமிக்கும்படி வேண்டிக் கொண்டார். இக்கோரிக் கையை ஏற்றுக்கொண்ட நிர்வாக சபை திரு. பா. பாலகாங்கே யன் அவர்களை தர்மகர்த்தா சபை உறுப்பினராக நியமிப் பதற்கு இணங்கியது.

**சப்பறத் திருப்பணி :**

பழைய சப்பறம் பாவிப்புக்கு உகந்ததாக இல்லை என்ற காரணத்தினால் ஒரு இலட்சத்தி ஏழாயிரம் ரூபா (107,000/–) செலவில் திருத்த வேலைகளை மேற்கொண்டு திரு. செ. பாலச்சந் திரன் ஸ்தபதி அவர்களால் சப்பறப் புனருத்தாரணப் பணியை தனது குழுவினரோடு வேலை செய்து நிறைவேற்றினார்.

**மகோற்சவகால வானொலி அஞ்சல் :**

03 – 09 – 1998 தொடக்கம் 05 – 09 – 1998 வரையுள்ள மூன்று தினங்களும் இலங்கை வானொலியில் நிகழ்ச்சிகள் யாவும் நேரடி அஞ்சல் செய்யப்பட்டது. இந் நிகழ்வுக்கு உதவிய இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும், யாழ். ரெலிகொம் நிறுவனத் துக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

**திருமகள் அழுத்தகம், சுன்னாகம் :**

சுன்னாகத்தில் இயங்கி வந்த தேவஸ்தானத்துக்குச் சொந்த மான மேற்படி அச்சகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு அருகில் உள்ள பிரதான வீதியில் அமைந்த வசதி யான வீடு ஒன்றில் இயங்குகின்றது. மீண்டும் நல்லபடி அச்சகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேவஸ்தான மகளிர் இல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் மணிமண்டபப் பணிகள் சார்பான அச்சுவேலைகளை மிகச் செம்மையாக நிறைவேற்றித் தருவது குறிப்பிடத்தக்கது.

**தேவஸ்தானத் தலைவர்**
**சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தால் அளிக்கப்பட்ட ''கலாநிதி''ப் பட்டமளிப்பு வைபவம் :**

*04 – 10 – 1998* ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் முதன் முதலாக மேடைக்கு அழைக்கப்பட்டு யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்கள் சிவத் தமிழ்ச் செல்வி அவர்களைக் கௌரவித்தார். பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் அம்மையாரைப் பற்றிய பட்டமளிப்பு அறிமுக உரையை தமிழிலும், ஆங்கிலத்திலும் வாசித்து வழங்கினார். இதனை அடுத்து பட்டமளிப்பு நடைபெற்றது. பல நூற்றுக்கும் மேற்பட்ட அன்பர்கள், ஆதரவாளர்கள் மண்டபத் துக்கு வெளியே நின்று அம்மையாருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தும் புகைப்படம் எடுத்தும் பொன்னாடை போர்த்தும் மகிழ்ந்த காட்சி அற்புதமானது. இந்நிகழ்வை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் திருகோணமலை, மட்டக் களப்பு, கொழும்பு ஆகிய இடங்களிலும் கனடா, இலண்டன், அவுஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் கௌரவிப்பு விழாவை அந்த அந்த நிறுவனங்கள் நடாத்தி மகிழ்ந்தன. கொழும்பு வாழ் தமிழ் மக்கள் அனைவரும் சேர்ந்து கொம்பனித் தெரு சிவசுப்பிர மணிய சுவாமி கோயில் மண்டபத்தில் பாராட்டு விழாவை நடாத்திச் சிறப்பித்தனர்.

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J P.**
**அவர்களின் பிறந்தநாள் அறநிதியம் :**

ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி அம்மையாரின் பிறந்தநாள் அறநிதியவிழா கடந்த பத்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அறநிதியத்தின் வட்டிப்பணத்தில் இருந்து சமய சமூக, கல்வி நிறுவனங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்படுகின்றது. வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம், அந்தணர் நலன்கள், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பல்கலைக்கழக மாணவர்கள், பாராட்டுக்குரிய கல்விமான்கள், ஆகியோருக்கு இந்தப்பணம் பயன்படுத்தப்படுகிறது. கனடாவில் வாழும் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் பாடி அளித்த ''தங்கம்மா நான்மணிமாலை'' என்ற நூலின் விற்பனைப் பணம் இங்கு அனுப்பப்பட்டு அறநிதியத்தில் சேர்க்கப்படுகிறது. ஆண்டு தோறும் இந் நிதியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்கது. 07 – 01 – 1998இல் அரசினர் முதியோர் இல்லத்துக்கு அறநிதிய வட்டிப்பணம் முப்பதினாயிரம் ரூபா வழங்கப்பட்டது. 07 – 01 – 1999இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அறநிதிய வட்டிப் பணமான ரூபா (50,000/-) ஐம்பதினாயிரம் வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் இவ்வட்டிப் பணம் முதலுக்கு ஏற்ப அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. கனடாவிலிருந்து திரு. பசுபதிநாதன் வல்லிபுரம் என்பவர் 100 C A D பணத்தை அறநிதியத்துக்கு அனுப்பி வைத்தமை நன்றிக்குரிய செயலாகும். ஆண்டுதோறும் ஜனவரி 7ஆம் திகதி நடைபெறும் இந்நிகழ்வில் இந்த வருடம் வைத்தியக் கலாநிதி இராஜேந்திரப்பிரசாத் அவர்கள் அறக்கொடைப் பணத்தை ஏற்று உரை ஆற்றினார். அடுத்த ஆண்டு 07 – 01 – 2000ஆம் நாள் அம்மையாரின் 75ஆம் ஆண்டு நிறைவு விழா என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

**இதய அஞ்சலி :**

தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் நீண்டகால உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து அனைத்துப் பணிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்த திரு. சே. சிதம்பரஉடையார் அவர்கள் 13 - 06 - 1998 இறைபதம் அடைந்தார். இந்த சோகச் செய்தி குறித்து எமது தேவஸ்தானம் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்துக்குத் தெரிவித்துக் கொண்டோம். உதயன் பத்திரிகையிலும் கண்ணீர் அஞ்சலியைப் பிரசுரித்தோம்.

மில்க்வைற் நிறுவனத்தின் முதல்வராக விளங்கிய சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராஜா அவர்கள் 22 – 07 – 1998இல் மறைந்த செய்தி எம்மை கவலை அடைய வைத்தது. அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

**நன்றி கூறுகின்றோம் :**

1. மதிப்பார்ந்த யாழ். அரச அதிபர் அவர்கள்
2. வலி வடக்கு பிரதேச செயலர் அவர்கள்
3. தெல்லிப்பழை, துர்க்காபுரம் கிராமசேவகர்கள்
4. உள்ளூர், வெளியூர் பத்திரிகை நிறுவனங்கள்
5. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கொழும்பு, யாழ். சேவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அன்பளிப்புக்களை வழங்கி ஆதரவு நல்கும் நல்ல உள்ளம் படைத்தவர்கள்

7. மல்லாகம் கிருபா போட்டோ நிறுவனம், சுன்னாகம் யோகா போட்டோ நிறுவனம்.

8. அன்னதானம் வழங்கி ஆதரவு நல்கும் அறக்கொடை வள்ளல்கள்.

9. சரியைத் தொண்டுகள் ஆற்றும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை

10. மருதனார்மடம் இராமநாதன்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்

11. கொழும்பில் தேவஸ்தானக் கருமங்களையும் வங்கிக் கடமைகளையும் சிறப்பாக நிறைவேற்றித் தரும் நிர்வாக சபையின் கொழும்பு பிரதிநிதி திரு. சி. புஷ்பநாதன் அவர்கள்.

12. சுன்னாகம் திருமகள் அழுத்தகப் பணியாளர்கள்

13. தேவஸ்தான நீர் மின் வேலைகளை சீர் செய்து தரும் மல்லாகம் திரு. த. தயானந்தன் அவர்கள்

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**, J. P.
தலைவர்

**திரு. அ. சண்முகநாதன்**
பொருளாளர்

**திரு. நா. தவநாதன்**
**திருமதி ம. இராமநாதன்**
செயலாளர்

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

அன்புடையீர்,

## 1998ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி முடிவுற்றாண்டிற்கான கணக்காய்வு அறிக்கை

மேற்படி தேவஸ்தானத்தின் நிதி நடவடிக்கைகளின் கணக்காய்வினை மேற்கொண்டு பின்வருவனவற்றைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

1. **பொதுநிதி ரூபா 13275971/91**

*01-01-1998* இல் ரூபா *12374345/80* சதம் இருந்தது. இவ்வருடம் வருவானச் செலவுக் கணக்கு மீதி ரூபா *691728/11* சதமும் இவ்வருடம் பவுண் அன்பளிப்பு *209898/-* வும் சேர்க்கப்பட்டு இவ்வருட மீதியாக *13275971/91* சதமுள்ளது.

2. **அறக்கட்டளை நிதி ரூபா 1026600/-**

*01-01-1998* இல் ரூபா *486600/-* இருந்தது. இவ்வருடம் ரூ *340000/-* அன்பளிப்பும் சென்ற வருடம் ஐந்தொகையில் செல்மதி எனக் காட்டப்பட்ட ரூபா *400000/-* இல் ரூபா *200000/-* திருமதி விசாலாட்சி அரியகுட்டி அம்மா அவர்களினால் வழங்கப்பட்ட அறநிதிய அன்பளிப்பாக சேர்க்கப்பட்டு இவ்வருட மீதியாக *1026600/-* உள்ளது.

**ஒதுக்கு நிதி ரூபா 1083485/86**

சென்ற வருட மீதித் தொகையே இவ்வருடமும் மீதியாகவுள்ளது. இவ்வருடமும் மேற்படி நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆனால் இந்நிதி வைப்பு வட்டி வைப்புடன் சேர்க்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி வருடத்தில் மேற்படி நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்படும்போது வட்டியும் நிதியுடன் சீராக்கம் செய்யப்படவுள்ளது.

**நிலையான சொத்துக்கள் ரூபா 7207313/90**

சென்ற வருட மீதி ரூபா *7219182/68* சதம் இருந்தது. இவ்வருடம் ரூபா *198589/50* சதம் பெறுமதியான சொத்துக்கள் சேர்க்கப்பட்டும் ரூபா *210458/28* சதம் பெறுமானத் தேய்வாகக் கழிக்கப்பட்டும் இவ்வருட மீதியாக ரூபா *7207313/90* சதம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெள்ளி ரூபா 31695/50**

வெள்ளி சென்ற வருட மீதிப் பெறுமதியான தொகையே இவ்வருடமும் உள்ளது,

**பித்தளை ரூபா 37033/-**

பித்தளை சென்ற வருட மீதிப் பெறுமதியே இவ்வருடமும் மீதியாகவுள்ளது.

**பவுண் ரூபா 480800/-**

| | | |
|---|---|---|
| *01-01-1998 இல் மீதி* | ரூபா | *249195.00* |
| இவ்வருட அன்பளிப்பு | | *209898.00* |
| இவ்வருடம் செய்யப்பட்ட நகை | | *21707.00* |
| *31-12-1998 இல் மீதி* | ரூபா | *480800.00* |

**முதலீடு திருமகள் அழுத்தகம் ரூபா 1100000/-**

மேற்படி முதலீடானது கடந்த சில வருடங்களாக (முதலீடு செய்யப்பட்ட காலத்திலிருந்து) முதலீடாகக் காட்டப்பட்டு வருகிறது. இம்முதலீட்டு வருமானமானது தேவஸ்தானக் கணக்கில் சேர்க்கப்படாது. அழுத்தக வளர்ச்சி கருதி அழுத்தகக் கணக்கிலேயே தனியான சேமிப்புக் கணக்கில் ( இலங்கை வங்கி சே. க/கு இலக்கம் *12283* ) வைப்புச் செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

**நிலையான சேமிப்பு வைப்புக்கள் ரூபா 5610724/69 சதம்**

வர்த்தக வங்கி யாழ் கிளையில் பொதுநிதி வைப்பாக ரூ *958709/62* சதமும் அறக்கட்டளை நிதி வைப்பாக ரூபா *415000/-* வுமாக இவ்வருட மீதியாக ரூபா *1373709/62* சதம் உள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி யாழ் கிளையில் பொதுநிதி வைப்பாக ரூ *62200/-* வும் அறக்கட்டளை நிதி வைப்பாக சென்ற வருட மீதியான ரூ *70000/-* வும் இவ்வருட வைப்பான ரூ *240000/-* வுமாக ரூ *310000/-* வும் ஒதுக்குநிதி வைப்பாக சென்ற வருட மீதியான ரூபா *600000/-* வும் மொத்த வைப்பாக இவ்வருட மீதி *972200/-* உள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையில் சென்ற வருட மீதிகளான பொதுநிதி வைப்பாக ரூபா *275000/-* வும் அறக்கட்டளை நிதிவைப்பாக ரூ *276600/-* வும் ஒதுக்கு நிதி வைப்பாக ரூபா *225000/-* வும் இவ்வருட மீதியாக *776600/-* உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சேமிப்பு வங்கி வெள்ளவத்தைக் கிளையில் பொதுநிதி வைப்பாக சென்ற வருட மீதியான ரூபா 150000/- இவ்வருடமும் மீதியாகவுள்ளது.

இலங்கைவங்கி சுன்னாகம் கிளையில் சென்ற வருட மீதிகளான பொதுநிதி வைப்பு ரூபா 400000/-வும் அறக்கட்டளை நிதி வைப்பு ரூ 25000/- வும் இவ்வருட மீதியாக ரூபா 425000/- உள்ளது.

**தேசிய சேமிப்பு வங்கி க/கு இல 1001இல் (சுன்னாகம் கிளை)**

| | | |
|---|---|---|
| 01-01-1998இல் மீதி | | 78918-23 |
| இவ்வருட வட்டி | | 7930-45 |
| இவ்வருட மீதி | ரூபா | 86848-68 |

**தேசிய சேமிப்பு வங்கி க/கு இல 716இல் (யாழ் கிளை)**

| | | |
|---|---|---|
| 01-01-1998இல் மீதி | | 443100-20 |
| இவ்வருட வட்டி | | 46359-60 |
| வட்டி (நிலையான வைப்பு) | | 14000-00 |
| இவ்வருட மீதி | ரூபா | 503459-80 |

தேசிய சேமிப்பு வங்கி - வெள்ளவத்தை கிளையில் க/கு இல. 1032இல் சென்ற வருட மீதியான தொகையே இவ்வருடமும் மீதியாகவுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக வட்டி கணக்கிடப்படாமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதற்கான வட்டி கணிக்கப்படல் வேண்டும். (வங்கிப் புத்தகம் கொழும்பில் இருந்தமையால்)

இதே கிளையில் க/கு இல. 100371118017இல் ரூபா 500000/- இவ்வருடம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

பிரத்தியேக வங்கியில் ரூபா 49390/- மீதியாகவுள்ளது

**நடைமுறை வைப்புக்கள் ரூபா 870529/73 சதம்**

இலங்கை வங்கி - சுன்னாகம் கிளையில் 221536/60 சதமும், இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி கிளையில் க/கு இல. 0370210586 இல் 385174/84 சதமும், வர்த்தக வங்கி, யாழ். கிளையில் க/கு இல. 12692இல் 263518/29 சதமும் ஆக மொத்தம் ரூபா 870529/73 சதம் உள்ளது.

**கையிருப்பு ரூபா 47960/95 சதம்**

01-01-1999இல் கையிருப்பானது எம்மால் பரிசீலிக்கப்பட்ட போது மேற்படி தொகை பொருளாளரிடம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கும்பாபிஷேக மலர்**

மேற்படி மலரானது சென்ற வருடம் 300 பிரதிகள் வெளியிடப்பட்டும் இதில் 68 பிரதிகள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டும் 130 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டும், செலவு முழுமையாகக் கணக்குகளில் சேர்க்கப்பட்டும் இருப்பாக 102 பிரதிகள் உள்ளதாக சென்ற வருட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. இவ் இருப்பில் ரூபா 2800/- தொகைக்கு இவ்வருடம் விற்கப்பட்டுள்ளது. இத்தொகை புத்தக விற்பனையாக வருமானச் செலவுக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

**வருமான செலவினம்**

அர்ச்சனை ரூபா 504397/-, அன்பளிப்பு ரூபா 2003053/12, திருப்பணி அன்பளிப்பு ரூபா 88901/- உண்டியல் ரூபா 195534/- வட்டி ரூ 741103/07ம் ஏனைய வரவுகளுமாக ரூபா 3905359/01 சதம் வரவாகவும்,

பொது அன்பளிப்பு 354360/-, மின்னிணைப்புச் செலவு 115487/75, மகளிர் இல்ல அன்பளிப்பு 240000/-, அந்தணர், பணியாளர் சம்பளம் 329400/-வும் ஏனைய செலவுகளுமாக ரூபா 3213630/90 சதமும் ஏற்பட்டுள்ளது. இத்தொகையில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத் திருப்பணிக்குச் செலவிடப்பட்ட ரூபா 1350000/- உள்ளடக்கப்பட்டுள்ளது.

நல்லூர் மணிமண்டபம் மகளிர் இல்லக்கணக்கில் நிலையான சொத்தாகச் சேர்க்கப்பட்டுள்ளதால் தேவஸ்தானக் கணக்கில் செலவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

**அன்னதானம்**

நல்லூர் அன்னதானம் மகோற்சவ அன்னதானம் வழமையான அன்னதானம் ஆகியவற்றின் செலவாக ரூபா 363589/75 சதம் மேற்கொள்ளப்பட்டும், வரவாக ரூ 259909/10 சதம் பெறப்பட்டும் உள்ளது. இத்தொகை குறிப்பு, 10ல் காட்டப்பட்டு வருமானச் செலவுக் கணக்கிற்கு சேர்க்கப்பட்டுள்ளது.

நல்லூர் அன்னதானம் சார்பாக 72 மூடை அரிசி, 1 மூடை 35 கி. கிராம் சீனி, 9 மூடை 50 கி. கிராம் பருப்பு, 10 கி. கிராம் மிளகாய், 3½ கி. கிராம் கோப்பி, சோயா மீற் 02 மூடை, தேயிலை 05 கி. கிராம், தேங்காய் 126 என்பன பொருட்களாக பெறப்பட்டும் அன்னதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தங்கள் நன்றியுள்ள

**கா. சிவசுப்பிரமணியம் ச. செல்வேந்திரா அன் கோ**

(முகாமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை

## 31 - 12 - 1998இல் உள்ள ஐந்தொகை

| | குறிப்பு | | |
|---|---|---|---|
| **பொது நிதி :** | | | |
| 01-01-1998இல் உள்ள மீதி | | 12374345-80 | |
| இவ்வருட செலவு நீக்கிய வருவானம் | | 691728-11 | |
| இவ்வருட பவுண் அன்பளிப்பு | | 209898-00 | 13275971-91 |
| **அறக்கட்டளை நிதி :** | | | |
| 01-01-1998ல் உள்ள மீதி | | 486600-00 | |
| இவ்வருட அன்பளிப்பு | 01 | 540000-00 | 1026600-00 |
| **ஒதுக்கு நிதி :** | | | |
| 01-01-1998ல் உள்ள மீதி | | | 1083485-86 |
| | | | 15386057-77 |
| நிலையான சொத்துக்கள் | 02 | 7207313-90 | |
| வெள்ளி | | 31695-50 | |
| பித்தளை | | 37033-00 | |
| பவுண் | | 480800-00 | 7756842-40 |
| முதலீடு திருமகள் அழுத்தகம் | | | 1100000-00 |
| நிலையான சேமிப்பு வைப்புக்கள் | 03 | | 5610724-69 |
| **நடைமுறைக் கணக்கு :** | | | |
| இலங்கை வங்கி, சுன்னாகம் க/கு இல 3155 | | 221836-60 | |
| இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி 0370210586 | | 385174-84 | |
| வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் 12692 | | 263518-29 | 870529-73 |
| கையிருப்பு | | | 47960-95 |
| | | | 15386057-77 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் மேலே காட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி J. P.**
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 31 - 12 - 1998இல் முடிவுற்றாண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, பெறுவனவுக் கொடுப்பனவுக் கணக்கு, 31 - 12 - 1998இல் உள்ள ஐந்தொகை என்பன எமக்குத் தரப்பட்ட ஆவணங்கள், புத்தகங்கள், விபரங்கள் என்பன எம்மால் பரிசீலனை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவை எமக்குத் தரப்பட்ட ஏடுகளின் படியும் இதே திகதியுள்ள எமது அறிக்கைக்கமையவும் சரியாகவுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

யாழ்ப்பாணம்.
18-06-1999

**செல்வேந்திரா அன் கோ**
பட்டயக் கணக்காளர்

**கா. சிவசுப்பிரமணியம்**
முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை
## 31 - 12 - 1998இல் முடிவுற்ற ஆண்டிற்கான
## வருமானச் செலவினக் கணக்கு

**வருமானங்கள்**

| | குறிப்பு | | | |
|---|---|---|---|---|
| அர்ச்சனை | 04 | | | 504397-00 |
| உண்டியல் | | | | 195534-00 |
| அன்பளிப்பு | | | | 2003053-12 |
| உபயம் | | வரவு | 632835-00 | |
| | | செலவு | 490909-75 | 141925-25 |
| மகோற்சவம் | 05 | | | 29722-84 |
| விசேட உற்சவங்கள் | 06 | | | 128824-08 |
| திருப்பணி அன்பளிப்பு | | | | 88901-00 |
| திருமணம் | | வரவு | 201700-00 | |
| | | செலவு | 132601-35 | 69098-65 |
| வட்டி | 07 | | | 741103-07 |
| கும்பாபிஷேக மலர் விற்பனை | | | | 2800-00 |
| | | | | 3905359-01 |

**செலவினங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| நித்திய பூசை | 08 | 13394-00 | |
| பொது அன்பளிப்பு | 09 | 354360-00 | |
| மகளிர் இல்ல அன்பளிப்பு | | 240000-00 | |
| அன்னதானம் | 10 | 103680-65 | |
| நல்லூர் மணிமண்டப திருப்பணி | | 1350000-00 | |
| புதுவருடப் பிறப்பு தீபாவளிச்செலவு | | 48223-50 | |
| அந்தணர், பணியாளர் சம்பளம் | | 254500-00 | |
| விசேட கொடுப்பனவு | | 74900-00 | |
| சேம உதவு தொகை | | 24660-00 | |
| பொது நிர்வாகச் செலவு | | 138117-50 | |
| மின்னிணைப்பு செலவு | | 115487-75 | |
| கணக்காய்வுக் கட்டணம் | | 20000-00 | |
| திருத்தமும் பராமரிப்பும் | 11 | 71296-50 | |
| இராமநாதசிவன் மணவாளக்கோலம் | | 20200-00 | |
| ஏனைய செலவு | 12 | 174352-72 | |
| பெறுமானத் தேய்வு | 02 | 200450-28 | 3213630-90 |
| செலவு நீக்கிய வருமானம் | | | 691728-11 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை

## 31-12-1998இல் முடிவுற்ற ஆண்டிற்கான

## பெறுவனவுக் கொடுப்பனவுக் கணக்கு

**01-01-1998இல் மீதிகள் :**

| | | |
|---|---|---|
| நிலையான, சேமிப்பு வைப்புக்கள் | 4242676-62 | |
| நடைமுறைக் கணக்கு மீதிகள் | 1419856-30 | |
| கையிருப்பு | 44792-56 | 5707325-48 |

**பெறுவனவுகள் :**

| | | |
|---|---|---|
| அர்ச்சனை | 518283-00 | |
| உண்டியல் | 195334-00 | |
| அன்பளிப்பு | 2003053-12 | |
| உபயம் | 632835-00 | |
| கொடியேற்றம் | 119973-00 | |
| மகோற்சவ உபயம் | 265586-00 | |
| மகோற்சவ அன்னதானம் | 60711-00 | |
| திருவிளக்குப் பூஜை | 2500-00 | |
| நித்திய பூஜை | 550-00 | |
| திருவெம்பாவை | 31500-00 | |
| இலட்சார்ச்சனை | 136494-00 | |
| வரலட்சுமி நோன்பு | 49550-00 | |
| கௌரி நோன்பு | 116950-00 | |
| மணவாளக் கோலம் | 1000-00 | |
| பொங்கல் | 3640-00 | |
| நவராத்திரி | 41529-83 | |
| திருப்பணி | 88901-00 | |
| அன்னதானம் | 92468-10 | |
| திருமணம் | 201700-00 | |
| நல்லூர் அன்னதானம் | 106730-00 | |
| அறநிதிய வரவு | 340000-00 | |
| கும்பாபிசேக மலர் விற்பனை | 2800-00 | |
| நானாவிதம் | 106965-00 | |
| வட்டி | 740103-07 | 5860356-12 |
| | | 11567681-60 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடுப்பனவுகள் :**

| | |
|---|---|
| அர்ச்சனை | 13886-00 |
| உபயம் | 490909-75 |
| கொடியேற்றம் | 59213-00 |
| மகோற்சவ உபயம் | 189248-25 |
| மகோற்சவ அன்னதானம் | 176640-50 |
| மகோற்சவ பொதுச்செலவு | 107374-91 |
| திருவிளக்குப் பூஜை | 3379-00 |
| நித்திய பூஜை | 13944-00 |
| திருவெம்பாவை | 36432-00 |
| இலட்சார்ச்சனை | 104978-75 |
| வரலட்சுமி நோன்பு | 16610-00 |
| கௌரி நோன்பு | 51082-50 |
| மணவாளக் கோலம் | 5900-00 |
| பொங்கல் | 4750-00 |
| நவராத்திரி | 31207-50 |
| திருப்பணி | 198597-00 |
| அன்னதானம் | 67665-75 |
| திருமணம் | 132601-35 |
| நல்லூர் அன்னதானம் | 119283-50 |
| நல்லூர் மணிமண்டப திருப்பணி | 1350000-00 |
| இராமநாதசிவன் மணவாளக் கோலம் | 20200-00 |
| அந்தணர், பணியாளர் சம்பளம் | 254500-00 |
| மகளிர் இல்ல அன்பளிப்பு | 240000-00 |
| பொது அன்பளிப்பு | 354360-00 |
| போக்குவரத்து | 87840-00 |
| விறகு, எரிபொருள் | 48017-27 |
| கோசாலை | 2000-00 |
| புதுவருடப் பிறப்பு | 28213-50 |
| தீபாவளி | 20010-00 |
| பொது உபசாரம் | 46888-25 |
| நிர்வாகச் செலவு | 138117-50 |
| காகிதாதி, பத்திரிகை | 7544-00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 20000-00 |
| பொருட்கள் (சொத்து) கொள்வனவு | 66696-50 |
| விசேட கொடுப்பனவு | 74900-00 |
| திருத்தமும் பராமரிப்புச் செலவும் | 26299-50 |
| மின்னிணைப்புச் செலவு | 115487-75 |
| சேம உதவு தொகை | 24660-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அச்சுக்கூலி | 33065-00 | |
| கலாநிதிப்பட்ட கௌரவிப்பு விழா | 20197-00 | |
| வங்கிக் கட்டணம் | 121-20 | |
| நானாவிதம் | 35645-00 | |
| நல்லை ஆதீனத்திற்கு செலுத்தியது | 200000-00 | 5038466-23 |

**31 - 12 - 1998இல் மீதிகள்**

| | | |
|---|---|---|
| நிலையான சேமிப்பு வைப்புக்கள் | 5610724-69 | |
| நடைமுறைக் கணக்கு மீதிகள் | 870529-73 | |
| கையிருப்பு | 47960-95 | 6529215-37 |
| | | 11567681-60 |

## குறிப்பு 04

**அர்ச்சனை**

| | |
|---|---|
| அர்ச்சனை வரவு | 518283-00 |
| அர்ச்சனை செலவு (தபால் அர்ச்சனை உட்பட்ட செலவு) | 13886-00 |
| | 504397-00 |

## குறிப்பு 05

**மகோற்சவம்**

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் வரவு | 119973-00 | | |
| கொடியேற்றம் செலவு | (59213-00) | 60760-00 | |
| மகோற்சவஉபயம்வரவு | | 265586-00 | |
| ,, உபயம்செலவு | (189278-25) | | |
| ,, பொதுச்செலவு | | 76337-75 | 137097-75 |
| | | | (107674-91) |
| | | | 29722-84 |

## குறிப்பு 06

**விசேட உற்சவங்கள்**

| | | |
|---|---|---|
| இலட்சார்ச்சனை வரவு | 136494-00 | |
| செலவு | (104978-75) | 31515-25 |
| நவராத்திரிவிழா வரவு | 41529-83 | |
| செலவு | (31207-50) | 10322-33 |
| கௌரிநோன்பு வரவு | 116950-00 | |
| ,, செலவு | 51082-50 | 65867-50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வரலட்சுமிநோன்பு வரவு | 49550-00 | | |
| ,, செலவு | (16610-00) | 32940-00 | 140645-08 |
| திருவிளக்குப்பூசைசெலவு | 3379-00 | | |
| ,, வரவு | (2500-00) | 879-00 | |
| பங்குனிபொங்கல்செலவு | 4750-00 | | |
| ,, வரவு | (3640-00) | 1110-00 | |
| மணவாளக்கோலம்செலவு | 5900-00 | | |
| ,, வரவு | (1000-00) | 4900-00 | |
| திருவெம்பாவை செலவு | 36432-00 | | |
| ,, வரவு | (31500-00) | 4932-00 | (11821-00) |
| | | | 128824-08 |

## குறிப்பு 07

**வைப்பு வட்டி**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி | | 686813-02 |
| **சேமிப்பு வைப்பு வட்டி** | | |
| க/கு இல. 1001 | 7930-45 | |
| ,, 716 | 46359-60 | 54290-05 |
| | | 741103-07 |

## குறிப்பு 08

**நித்திய பூசை :**

| | |
|---|---|
| நித்திய பூசை செலவு | 13944-00 |
| ,, வரவு | 550-00 |
| | 13394-00 |

## குறிப்பு 09

**பொது அன்பளிப்பு :**

| | |
|---|---|
| நூல்வெளியீட்டு விழா | 20000-00 |
| ஆலய அன்பளிப்புக்கள் | 24500-00 |
| திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகள் | 28500-00 |
| பரிசளிப்பு விழா | 25000-00 |
| வைத்திய சிகிச்சை | 23800-00 |
| விளையாட்டுப் போட்டி | 17000-00 |
| மரணக் கிரியைகள் | 12000-00 |
| பாடசாலைகள் | 4000-00 |
| சேவை நலன் பாராட்டுக்கள் | 4300-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திறப்பு விழா, பிறந்ததின விழா | 5000-00 | |
| அந்தணர் பெருமக்கள் | 27000-00 | |
| கல்விக் கொடுப்பனவு | 7950-00 | |
| பொதுவானவை (ஏனையவை) | 155310-00 | |
| | 354360-00 | |

## குறிப்பு 12

ஏனைய செலவு :

| | | |
|---|---|---|
| போக்குவரத்து | 87840-00 | |
| விறகு எரிபொருள் | 48017-27 | |
| பொது உபசாரம் | 46888-25 | |
| கோசாலை | 2000-00 | |
| காகிதாதி பத்திரிகை | 7544-00 | |
| நானாவிதம் | 85645-00 | |
| கலாநிதிப்பட்ட கௌரவிப்பு விழா | 20197-00 | |
| அச்சுக்கூலி | 33065-00 | |
| வங்கிக் கட்டணம் | 121-20 | 281317-72 |
| கடை வாடகை | 1200-00 | |
| நானாவிதம் | 105765-00 | 106965-00 |
| | | 174352-72 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச் செல்வி,
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
பிறந்த நாள் அறநிதியம்
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

***அன்புடையீர்,***

## 1998 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு அறிக்கை

*மேற்குறிப்பிட்ட நிதியத்திற்கான கணக்காய்வினை மேற் கொண்டு பின்வருவனவற்றைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகின்றோம்.*

*இவ்வருடம் நிலையான வைப்பு வட்டியாக ரூபா 26360/-ம், அன்பளிப்பாக ரூபா 95252/-ம் பெறப்பட்டு கைதடி முதியோர் இல்லத்திற்கு ரூபா 30000/- அன்பளிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.*

*இவ்வருடம் ''பத்துச் சொற்பொழிவுகள்'' எனும் நூல் வெளியிடப்பட்டது. 500 பிரதிகள் அச்சடிக்கப்பட்டுள்ளது. இதில் 264 பிரதிகள் இருப்பாக உள்ளன. ரூபா 14390/- தொகைக்கு புத்தகங்கள் விற்கப்பட்டுள்ளது.*

*சேமிப்புக் கணக்கில் இருந்து ரூபா 350000/-ம் மீளெடுக்கப் பட்டு ரூபா 300000/- நிலையான வைப்புச் செய்யப்பட்டுள்ளது.*

**அறநிதி ரூபா 527585/73**

*01-01-1998இல் மீதியாக ரூபா 439822/02 இருந்தது. இவ் வருடம் மேலதிக வரவாக ரூபா 87763/71 பெறப்பட்டு இவ்வருட மீதியாக ரூபா 527585/73 உள்ளது.*

**நிலையான சேமிப்பு வைப்பு ரூபா 527585/73**

*நிலையான வைப்பாக சென்ற வருட மீதியாக ரூபா 150000/- இருந்தது. இவ்வருடம் ரூபா 300000/- வைப்புச் செய்யப்பட்டு ரூபா 450000/- இவ்வருட மீதியாகவுள்ளது. சேமிப்பு வைப்பாக சென்ற வருட மீதி ரூபா 289822/02 இருந்தது. இவ்வருடம் ரூபா 99442/- வைப்பிலிட்டும். ரூபா 38321/71 வட்டி சேர்க்கப்பட் டும் ரூபா 350000 – மீளெடுக்கப்பட்டும் இவ்வருட மீதியாக ரூபா 77585/-73 உள்ளது.*

*தங்கள் நன்றியுள்ள*
***செல்வேந்திரா அன் கோ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ்ச் செல்வி
## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
## பிறந்த தின அறநிதியம்
## 31-12-1998இல் முடிவடைந்த வருடத்திற்கான
## வரவு செலவுக் கணக்கு

**வரவு :**

| | | |
|---|---|---|
| நிலை வைப்பு வட்டி | 26360-00 | |
| அன்பளிப்பு | 95252-00 | |
| சேமிப்பு வைப்பு வட்டி | 11961-71 | |
| புத்தக விற்பனை | 14390-00 | 147963-71 |
| | | 147963-71 |

**செலவு :**

| | | |
|---|---|---|
| முதியயார் இல்ல அன்பளிப்பு | 30000-00 | |
| புத்தக வெளியீட்டுச் செலவு | 30200-00 | 60200-00 |
| மேலதிக வரவு அறநிதிக்கு மாற்றப்படுகிறது | | 87763-71 |

## சிவத்தமிழ்ச் செல்வி
## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
## பிறந்த தின அறநிதியம்
## 31-12-1998இல் ஐந்தொகை

**அறநிதி :**

| | | |
|---|---|---|
| 01-01-1998இல் மீதி | 439822-02 | |
| மேலதிக வரவு | 87763-71 | 527585-73 |
| | | 527585-73 |

**வைப்புக்கள் :**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு | 450000-00 | |
| சேமிப்பு வைப்பு | 77585-73 | 527585-73 |
| | | 527585-73 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட நிதியத்தின் மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளன என உறுதிப்படுத்துகின்றோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

பிறந்தின அறநிதியத்திற்கான 31 - 12 - 1998இல் உள்ள நிதி நிலைமைக்கூற்று, அதே திகதியில் முடிவடைந்த வருடத்திற் வரவு செலவுக் கணக்கு என்பன எமக்குத் தரப்பட்ட ஆவணங்கள் விபரங்களின் பிரகாரம் பரிசீலனை செய்து தயாரித்துள்ளோம். இவை எமக்குத் தரப்பட்ட ஆவணங்களின்படி சரியாகவுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

**கா. சிவசுப்பிரமணியம்**
முகாமையாளர்

**செல்வேந்திரா அன் கோ**
பட்டயக் கணக்காளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேவஸ்தான குருமார், பணியாளர் விபரம்

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
(பிரதான சிவாச்சாரியார்)

சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்
(உதவிக் குருக்கள்)

பிரம்மஸ்ரீ சி. சிவரூபன் ஐயா

சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயர்

பிரம்மஸ்ரீ கி. கணேசமூர்த்தி சர்மா

## பணியாளர்கள்

திரு. கா சிவபாலன்
திரு. ந. உமாகரன் (யூன் 1998 வரை)
திரு. வி. சிவகுமாரன்
திரு. வை. கணேசானந்தன் (யூலை 1998 தொடக்கம்)
செல்வி ச. ரேவதி
செல்வி த. மஞ்சுளா
திரு. சு. சுப்பிரமணியம்
திரு. செ. வல்லிபுரம்
திரு. பொ. தியாகராசா
திரு. வே. பாக்கியமுத்து
திரு. சி. ஆறுமுகம்
திரு. வ. கந்தையா

## தேவஸ்தான தவில் நாதஸ்வர வித்துவான்

திரு. இ. இந்திரகுமார் குழுவினர் மல்லாகம்

## பூமாலை அலங்காரம்

திரு. வ. பஞ்சலிங்கம் மல்லாகம்

## பாதுகாப்புச் சேவை

திரு. க. சிவபாலசுந்தரம்
திரு. சி. சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org